முதன்மை மாவட்ட நீதிமன்றம், தேனி.

முன்னிலை திரு. C. சஞ்சய் பாபா , B.A., LLB.,

முதன்மை மாவட்ட நீதிபதி, தேனி.

2022-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் நாள் திங்கள்க்கிழமை

**அசல் வழக்கு எண் 4/2021**

**CNR No.TNTH 0100-4583-2020**

கனரா வங்கி, கிளைமேலாளர்,
தேவாரம். ... வாதி

/எதிர்/

V.மணி ... பிரதிவாதி

இவ்வழக்கானது இறுதியாக என் முன்னர் 27.06.2022-ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.முருகதினகரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு S.முருகன் மற்றும் வழக்கறிஞர் திரு D.ஜெயக்குமார் ஆகியோர்கள் முன்னிலையாகியும், அதன் பின்னர் 27.06.2022-ம் தேதியன்று வாதி தரப்பு முதல் சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக பிரதிவாதி அழைக்கப்பட்டபோது பிரதிவாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவம் இல்லாத நிலையிலும், பிரதிவாதி அழைத்தும் ஆஜரில்லாததால் 27.06.2022-ம் தேதியன்று வருகையில்லா எதிரவராகத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும்,

ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்...

## <u>தீர்ப்புரை</u>

வாதி வங்கியிடம் பிரதிவாதி பெற்ற மொத்த கடன் தொகையான ரூ.13,75,451/—க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் தேதி முதல் வசூல் தேதி வரை ஆண்டிற்கு 13% பின்வட்டியும் செலுத்த வேண்டுமென்றும் தவறும்பட்சத்தில் நீதிமன்ற நடவடிக்கையின்மூலம் பிராது சொத்தை விற்பனை செய்து வாதி வங்கிக்கு வரப்பற்ற வேண்டிய தொகையில் பாக்கி ஏற்பட்டால் பாக்கித் தொகை வசூலுக்காக பிரதிவாதியினுடைய இதர சொத்துக்களின்மேல் வாதி வங்கி நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், இவ்வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டுமென்று உத்தரவிடக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>:—

1. வாதி வங்கியில் பிரதிவாதி, பிரதிவாதியின் தென்னை அபிவிருத்திக்காக வேண்டி KCCS திட்டத்தின் மூலம் ரூ.1,00,000—ம் கடன் கேட்டு விண்ணப்பித்து மேற்படி விண்ணப்பங்களை பரிசீலித்து, பிரதிவாதிக்கு KCCS திட்டத்தின் கீழ் கணக்கு எண்.109484001649 4ல் ரூ.1,00,000ம் பிரதிவாதி, வாதி வங்கிக்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் எழுதிக்கொடுத்து கடனாக பெற்றுக்கொள்ள 14.07.2015ம் தேதியல் அனுமதி வழங்கியுள்ளது. பிரதிவாதி கடனுக்காக 14.07.2015ம் தேதியில் வாதியின் வங்கியில் வைத்து கடன் ஒப்பந்தமும் தேவையான அனைத்து

ஆவணங்களையும் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி கடன் ஒப்பந்தத்தின் படி KCCS திட்டத்தின் படி உள்ள கடன்தொகைக்கு 11.00% வட்டியும் செலுத்த பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் பிரதிவாதி உரிய வட்டி மற்றும் அசல் தொகைகளை வாதி வங்கிக்கு திரும்பச் செலுத்த ஒப்புக்கொண்டுள்ளார்.

2. மீண்டும் வாதி வங்கியில் பிரதிவாதி, பிரதிவாதியின் விவசாய அபிவிருத்திக்காக வேண்டி FDL திட்டத்தின் மூலம் ரூ.6,50,000/– கடன் கேட்டு விண்ணப்பித்து மேற்படி விண்ணப்பங்களை பரிசீலித்து, பிரதிவாதிக்கு FDL திட்டத்தின் கீழ் கணக்கு எண்.10948101401O–ல் ரூ.6,50,000 ம் பிரதிவாதி, வாதி வங்கிக்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் எழுதிக்கொடுத்து கடனாக பெற்றுக்கொள்ள 03.11.2015 ம் தேதியில் அனுமதி வழங்கியுள்ளது. பிரதிவாதி கடனுக்காக 03.11.2015 ம் தேதியில் வாதியின் வங்கியில் வைத்து கடன் ஒப்பந்தமும் தேவையான அனைத்து ஆவணங்களையும் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி கடன் ஒப்பந்தத்தின் படி FDL திட்டத்தின் படி உள்ள கடன்தொகைக்கு 12.15% வட்டியும் செலுத்த பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார். கடன் தொகைகளின் தவணைகள் தவறும் பட்சம், அபராத வட்டியாக 2% சேர்த்து செலுத்தவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

3. பிராது சொத்தானது பிரதிவாதிக்கு 16.05.2008 ம் தேதிய தேவாரம் சார்பதிவக ஆவண எண்.1100/2008 ன் படி பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி அசல் ஆவணங்களை தேவாரம் சார்பதிவகத்தில் 19.10.2015 ம் தேதி ஆவண எண்.2691/2015 ன் படி

வாதியின் வங்கியில் அசல் ஆவணங்களை வைப்பீடு செய்தததற்கான குறிப்பாணை எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்.

4. வாதி வங்கியில் பிரதிவாதி பெற்ற மேற்படி விவசாயக்கடன்களை ஒப்புக்கொண்டபடி தவணை தொகையினை திரும்பச் செலுத்தாமல் இருந்துள்ளார். எனவே வாதியின் வங்கியில் உள்ள பிரதிவாதியின் KCCS திட்ட கடன் கணக்கு எண்.109484001 6494−ல் 22.11.2020ம் தேதி வரையிலான கணக்கின்படி, தவணை தவறிய தொகையான ரூ.1,62,692/− மற்றும் FDL திட்ட கணக்கு எண்.109488101 4010−ல் கடந்த 22.11.2020ம் தேதி வரையிலான கணக்கின் படி, தவணை தவறிய தொகையான ரூ.12,12,759−ம் ஆக மொத்தம் ரூ.13,75,451/−ஐ வாதி வங்கிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டியது நிலுவையில் உள்ளது. மேலும் தாவா தொகையான ரூ.13,75,451/−ஐ வாதி வங்கிக்கு பிரதிவாதியை செலுத்தி வைக்கும்படி உத்தரவிட்டும், அசல் தொகைகள் ரூ.13,75,451/−க்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை மாதம் ஒன்றுக்கு 13% பின்வட்டியும் சேர்த்து செலுத்தி வைக்கும்படிக்கும் ஈடுகடன் சொத்தைப் பொறுத்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், மேற்படி கடன் தொகைகளுக்கு தாவா சொத்து போதாத பட்சத்தில் பிரதிவாதியின் மீது Personal Decree உத்தரவு பிறப்பிக்கக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு</u>**:–

1. வாதியின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. வாதிதரப்பில் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்குப் புறம்பானவை ஆகும்.

2. வழக்குரையில் வட்டி கணக்கீடாக அதிகப்படியாக குறிப்பிட்டு அதற்கு பிரதிவாதி ஒப்புக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளது உண்மைக்குப் புறம்பானதாகும். தென்னை விவசாயத்திற்காக கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் கிஷான் கிரிடிட் கார்டுதிட்ட (KCCS) லோன் காலாவதி தோஷத்தினால் இல்லா நிலையினை அடைந்த கடனாகும். காலாவதியான கடனை மீண்டும் வசூலித்துக்கொள்ள ஆவணங்களை உற்பத்தி செய்து வாதி தரப்பில் சட்டத்திற்குப் புறம்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. வாதியால் அதிக வட்டி விகிதத்தினை கணக்கிட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களைக் கொண்டு பிரதிவாதியிடம் சட்டத்திற்குப் புறம்பாக பணத்தை வசூல் செய்ய வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக வாதியால் பிரதிவாதியிடமிருந்து எவ்வித கையெழுத்தும் பெறாமல் உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. வாதிகோரியுள்ள பரிகாரம் சரியானதல்ல. தவறான பரிகாரத்திற்கு செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமும் சரியானதல்ல. வாதிின் வழக்கு காலாவதி தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிமீது வழக்குத்

தாக்கல் செய்ய வாதிக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. எனவே வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்கினை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று கோரி எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4**. வாதி தரப்பில், வாதி வங்கியின் கிளை மேலாளர் திருமதி தீபா நாயர் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எவையும் குறியிடப்படவில்லை.

**5. <u>இவ்வழக்கில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.</u>**

1. வாதியின் வழக்கு காலாவதி தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதா?

2. வாதிக்கு பிரதிவாதி வழக்குரையில் கோரியுள்ள தாவா தொகை ரூ.13,75,471/- வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

3. வாதி கோரியுள் முதல்நிலை தீர்ப்பாணை கிடைக்கத்தக்கதா?

4. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

**<u>தீர்வு</u>**

6. வாதி தரப்பு கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கானது வாதி வங்கியிடமிருந்து பிரதிவாதி பெற்ற மொத்த கடன் தொகை ரூ.13,75,451/-ஐ பின்வட்டியுடன் செலுத்த வேண்டுமென்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7**. இவ்வழக்கில் வாதி வங்கியின் கிளை மேலாளர் திரு.தீபா நாயர் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 தன்னுடைய நிரூபண வாக்குமூலத்தில், வாதி வங்கியில் பிரதிவாதி பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்தாமல் இருந்து வந்ததால் மேற்படி தொகைகளுக்கு உண்டான வட்டித் தொகை வகையறாக்களை செலுத்தி வைக்கக்கோரி தாவா வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே வழக்குரைப்படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார். மேற்கூறியவாறு வாதி தரப்பில் கூறப்படும் கூற்றுக்களை ஆட்சேபித்து பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தாலும் வாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விஷயங்களை பிரதிவாதி ஆட்சேபித்து குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை. பிரதிவாதி அழைத்தும் ஆஜரில்லாததால் 27.06.2022–ம் தேதியன்று வருகையில்லா எதிரவராக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

**8**. மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பு நெறியான AIR 2003 SC 2508-ல் Ramesh Chand Ardawatiya – Vs- Anil Panjwani என்ற வழக்கில் பிரதிவாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவம் இல்லை என்றால் வாதிதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் வாதியின் வழக்குமூலம் (Prima facie) நிரூபிக்கப்பட்டு வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

9. மேற்கூறிய மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பின் அடிப்படையில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மூலமாக வாதி வழக்குரையில் கூறியுள்ள விஷயங்களை முதல் நோக்கில் (Prima facie)

நிரூபித்துள்ளார் என்றும், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் வாயிலாக வாதி தன்னுடைய வழக்கை நிரூபித்துள்ளார் என்று தீர்மானித்து வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில்,** வாதி வங்கியிடம் பிரதிவாதி பெற்ற கடன் தொகையான ரூ.13,74,451/–க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டிற்கு 12% வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை 6% பின்வட்டியுடன் செலுத்த வேண்டுமென்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. தொகை செலுத்த கால அவகாசம் 3 மாதம்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2022–ம் ஆண்டு ஜூலை திங்கள் 04–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

Sd/-C.Sanjai Baba
முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.

**<u>வாதி தரப்பு சாட்சி</u>:-**

ம.சா.1. திருமதி.தீபா நாயர்
தேவாரம் கனரா வங்கி கிளை மேலாளர்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>:-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 14.07.2015 | பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் – அசல் |
| வா.சா.ஆ.2 | 14.07.2015 | வாதி வங்கியின் கடன் அனுமதி கடிதம் – அசல் |
| வா.சா.ஆ.3 | 14.07.2015 | வாதி வங்கிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்துள்ள கடன் ஒப்பந்தம் – அசல் |
| வா.சா.ஆ.4 | 05.11.2020 | கடன் கணக்குப் பட்டியல்– அசல் |
| வா.சா.ஆ.5 | 03.11.2015 | கடன் விண்ணப்பம் - அசல் |
| வா.சா.ஆ.6 | 03.11.2015 | பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்துள்ள |
| வா.சா.ஆ.7 | 03.11.2015 | பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள கடன் ஒப்பந்தத்தின் அசல். |
| வா.சா.ஆ.8 | 05.11.2020 | கடன் கணக்கு பட்டியலின் அசல். |
| வா.சா.ஆ.9 | 23.04.1970 | முத்துகழுவ தேவருக்கு கருப்பையா வகையறா எழுதிக்கொடுத்த பதிவு கிரையப்பத்திரத்தின் அசல். |
| வா.சா.ஆ.10 | 02.09.1977 | விருமாண்டித் தேவருக்கு கருப்பணன் வகையறா எழுதிக்கொடுத்த பதிவு கிரையப்பத்திரத்தின் அசல். |
| வா.சா.ஆ.11 | 06.09.1977 | விருமாண்டித் தேவருக்கு துரைச்சாமி வகையறா எழுதிக்கொடுத்த பதிவு கிரையப்பத்திரத்தின் அசல். |
| வா.சா.ஆ.12 | 31.10.1984 | அம்சமணியம்மாளுக்கு ரங்கம்மாள் வகையறா எழுதிக்கொடுத்த பதிவு கிரையப்பத்திரத்தின் அசல். |
| வா.சா.ஆ.13 | 24.04.1986 | விருமாண்டித் தேவருக்கு வீரையா வகையறா எழுதிக்கொடுத்த பதிவு கிரையப்பத்திரத்தின் அசல். |
| வா.சா.ஆ.14 | 16.05.2008 | பிரதிவாதிக்கு விருமாண்டி தேவர் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல். |
| வா.சா.ஆ.15 | 19.10.2015 | பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த ஆவண வைப்பீட்டு குறிப்பாணையின் அசல். |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை</u>**.

Sd/-C.Sanjai Baba
முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,

தேனி.

அசல் வழக்கு எண் 4/2021

CNR No.TNTH 0100-4583-2020

சீரான/வரைவு தீர்ப்புரை

நாள். 04.07.2022